★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் [illegible] ஆடி 30 ஜுலகஸ் 5 இதழ் 183

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 15—8—83

## அகதிகள் கப்பல் சேவை 18ம்திகதியுடன்நிறுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு-காங்கேசன்துறை அகதிகள் கப்பல் சேவை இம் மாதம் பதினெட்டாம் திகதி வியாழக்கிழமையுடன் முடிவடையலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

கொழும்பில் பாதிக்கப்பட்ட அகதிகளை காங்கேசன்துறைக்குக் கொண்டுவரும் கப்பல் சேவை, இம்மாதம் முதலாம் திகதி ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

இன்று 'மேர்க்கெறண்டிப்' எனும் கப்பல் மூன்றுவது தடவையாக காங்கேசன்துறை துறைமுகம் வந்துசேரும் இக் கப்பலில் ஐநூறு அகதிகள் வருகின்றனர்.

நாளை செவ்வாய்க்கிழமை இந்திய கப்பல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 'பாரத் சீமா' எனும் கப்பல் இரண்டாவது தடவையாக இங்கு வருகிறது. இக்கப்பலில் 484 அகதிகள் உள்ளனர். இக் கப்பல் திருகோணமலைக்கும் ஒரு தடவை சென்றது.

பதினெட்டாம் திகதி 'நான் கௌரி' எனும் இந்தியக் கப்பல் கூட்டுத்தாபனக் கப்பல், இரண்டாவது தடவையாக காங்கேசன்துறை துறைமுகம் வரும் இக்கப்பலில் ஆயிரம் அகதிகள் வருவார்கள்.

## பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்த தமிழ் ஆசிரியர்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டத்திற்கு தற்காலிக இடமாற்றம் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும், ஏனைய நிவாரணங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கான கூட்டமொன்று இன்று காலை யாழ். ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையிலுள்ள இலங்கைத்தமிழர் ஆசிரியசங்க தலைமைப்பணிமனையில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு, மன்னார், வவனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களாகக் கணிக்கப் படமாட்டாதென்று இலங்கை தமிழர் ஆசிரிய சங்க பொதுச்

(4-ம் பக்கம் பார்க்க)

# பிரதமர் இந்திரா - அமிர் சந்திப்பு

## அவசர அழைப்பு மீது டில்லிவிரைந்தார்

(புதுடில்லி)

**நேற்றுமுன்தினமிரவு சென்னை வந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்தார்.**

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக பிரதமர் திருமதி இந்திரா காந்தி உட்பட இந்தியத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்த சென்னை வந்திருந்த திரு. அ. அமிர்தலிங்கம், பாரதப் பிரதமரின் திடீர் அவசர அழைப்பின்மீது நேற்று அதிகாலை சென்னையிலிருந்து இங்கு வந்துசேர்ந்தார்.

நேற்றுமுன்தினமிரவு இலங்கையிலிருந்து திரு. அமிர்தலிங்கம் சென்னை வந்துசேர்ந்தார். சென்னை விமான நிலையத்தில் அவரை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களும், தி. மு. க. பிரமுகர்களும் வரவேற்றனர்.

சென்னை விமான நிலையத்திலிருந்து முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆரின் இல்லத்துக்கு திரு. அமிர்தலிங்கம் சென்றார். அங்கு இராப்போசன விருந்தொன்றை திரு. எம். ஜி. ஆர். வழங்கினார். இதனையடுத்து இவ்விரு தலைவர்களும் உரையாடிக் கொண்டிருந்தபோது புதுடில்லியிலிருந்து பிரதமர் இந்திரா காந்தி திரு. அமிர்த

(4-ம் பக்கம் பார்க்க)

### செய்தித் தணிக்கை அமுல்

கடந்த மாதம் 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

## வவனியா வந்துசேரும் அகதிகள்

(வவனியா)

அகதிகளை வரவேற்பதில் வவனியாப்பகுதி இளைஞர்களும் தொண்டர் நிறுவனங்களும் பெரிதும் பங்குவகித்தன.

கடந்த சில நாட்களாகக் கொழும்பு, கண்டி, மாத்தறை, நுவரெலியா, மாத்தளை, குருநாகல் போன்ற பகுதிகளில் வன்செயலினால் பாதிக்கப்பட்டு அகதிகளாகத் தமது சொந்த இடங்களுக்கு பல ஆயிரக்கணக்கான தமிழர்

(4-ம் பக்கம் பார்க்க)

## நல்லூர் உற்சவம்: வாகனப்போக்குவரத்து தடையான பகுதிகள்

(யழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தில் பின்வரும் இடங்கள் வாகனப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்கு வாகனச் சொந்தக்காரர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

செட்டித்தெருச் சந்தி, கோவில்வீதியில் ஆலயத்தின் புதுவீதிச்சந்தி இருபக்கம், கோவில் வீதி ஆலயத்தின் வடக்குப்பக்கம், கல்யாண மண்டபத்தின் பழைய பருத்தித்துறை வீதிக்கும் புதிய பருத்தித்துறை வீதிக்கும் இடையில் உள்ள சந்தி.

இம்முறை உற்சவ காலத்தில் சாரணர் இயக்கம், இந்து இளைஞர் மன்றம், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை ஆகிய மூன்றும் ஆலய உற்சவ காலத்தில் பாதுகாப்பு-ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் பொலிசார் கடமையிலீடுபடுத்தப்படமாட்டார்கள் என்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நல்லூர் கந்தசுவாமிகோவில் வருடாந்த உற்சவம் முடிவுறும் வரை பக்தர்களும், பொதுமக்களும், வாகனச் சொந்தக்

(4-ம் பக்கம் பார்க்க)

## கைதடி முகாமில் 450 அகதிகள்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள அகதிகளில் இருப்பிட வசதியற்ற சுமார் 450பேர் கைதடி ஆயுள்வேதக்கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் வந்துகொண்டிருக்கும் இருப்பிடவசதியற்ற அகதிகளுக்கு, இராணுவத்தினர் வெளியேறிய குருநகர் முகாம் பயன்படுத்தப்படவுள்ளது.

குருநகர் முகாமில் அகதிகள் தங்கியிருப்பதற்குரிய மின்சாரம், குடிநீர், மலசல கூடம் போன்ற சகல வசதிகளும் செய்துகொடுப்பதற்கு சமூக சேவைப்பகுதி பிரதி ஆணையாளர் திரு. கே. கெங்காதரன் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார். இந்த முகாமுக்கு அயலிலுள்ள பொதுமக்கள், அகதிகள் முகாம் அமைப்பு வேலைகளுக்கு உதவி ஒத்தாசைகள் வழங்க வேண்டுமென்றும்திரு. கெங்காதரன்வேண்டுகோள்விடுத்துள்ளார். (மா)

## அகதிகள் முகாமில் பிறக்கும் குழந்தைகள்! சென்னை அம்மையார் அரும்பணி புரிகின்றார்

(கொழும்பு)

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் மற்றும் இந்துக்கல்லூரி அகதிகள் முகாம்களில் சுமார் பத்தாயிரம் பேர் உள்ளனர்.

இவர்களுக்கு சென்னையைச் சேர்ந்த திருமதி மேர்ஸி மொருயஸ் அம்மையார் அரும்பணியாற்றி வருகின்கிறார்.

இந்துக்கல்லூரி அகதிகள் முகாமில் ஏற்கனவே ஐந்து குழந்தைகள் பிறந்துள்ளன. மேற்படி இரண்டு முகாம்களிலும் மேலும் பதினொரு குழந்தைகள் இவ்வாரம் பிறக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இப்பொழுது அரசு பொறுப்பில் உள்ள இந்த முகாம்களில் பிரசவத்தாய்மார்களை வைத்தியர்கள் மிகவும் பரிவுணர்வுடன் கண்காணித்து வருகின்றனர்.

இந்த அகதிகள் முகாம்களில் பணி புரியும் திருமதி மேர்ஸி அம்மையார், சென்னையில் முழு நேர சமய போதகராகக் கடமையாற்றுபவர் என்பது குறிப்பிடத்தக்கது,

இங்கு வந்து சேர்ந்துள்ள மலைநாட்டுத் தமிழ்க் குடும்பங்களில் 32 குடும்பங்கள் யாழ்ப்பாணம் செல்கின்றனர்,

## கொள்ளைப் பொருட்களின் களஞ்சிய சாலையாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்!

(கொழும்பு)

கொழும்பில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பாதுகாப்புப்படையினரால் மீட்கப்பட்டுவரும் சொள்ளை போன பொருட்களின் களஞ்சியம் சாலையாகமாற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையங்களுக்கு கொண்டுவரப்படும் கொள்ளை போன பொருட்கள் லொறிகள் மூலமாக இக்கூட்டுத்தாபனத்துக்குக் கொண்டு வரப்பட்டு இங்குள்ள மண்டபமொன்றில் வைக்கப்பட்டு வருகின்றன.

காப்புறுதிக்கூட்டுத்தாபனத் தலைவர் இது பற்றித் தெரிவிக்கையில் பொலிஸ்நிலையங்களில் இப்பொருட்களைவைப்பதற்கேற்றவசதிகள் போதாதிருப்பதாலேயே இவை இங்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்றதுடன், இப்பொருட்களை உரியவர்கள் அடையாளம் காட்டும் வகையில் வசதிகள் செய்து கொடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

வீட்டுப்பாவனைப் பொருட்களுடன் வர்த்தகநிலையங்களில் கொள்ளையிடப்பட்ட பொருட்கள் பலவும் அவை வைக்கப்பட்டிருந்த பெட்டிகள், மற்றும் பெட்டகங்கள் திறக்கப்படாத நிலையில் கொள்ளையரிடமிருந்து மீட்டு காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தில் வைக்கப்பட்டுள்ளன. (கி)

## கிழக்கு ராமநாதபுரத்தில் பொலிஸ் தடை உத்தரவு!

(சென்னை)

கிழக்கு ராமநாதபுரத்தில் பதினான்கு நாட்களுக்கு ஊர்வலங்கள், கூட்டங்கள் ஆகியவற்றைத் தடைசெய்யும் பொலிஸ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மதுரையிலிருந்து ராமேஸ்வரம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் 'காமராஜ் காங்கிரஸ்' கட்சித் தலைவர் திரு. நெடுமாறன் தலைமையிலான பாதையாத்திரைக் குழுவினரின் நடவடிக்கைகள் கட்டு மீறிப்போகாதவகையிலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

புதிய நவீன எலக்ரோனிக் யந்திரம் மூலம்

**போட்டோ பிரதிகளுக்கு**

நியூவிக்ரேஸ்எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 23532. [8187]

DOCTOR M. B. B. S.
WANTED URGENTLY
FOR A GENERAL PRACTICE
ACCOMMODATION AVAILABLE
SALARY NEGOTIABLE
P. O. BOX 49, JAFFNA, 8218

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு. 22, சோமசுந்தரம் வழி, சுண்டிக்குளி. 8198

11 ஸ்ரீ (Audi) கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்பு: 22 சோமசுந்தரம் அவெனியூ சுண்டிக்குளி.
8197

சாவகச்சேரி பஸ்நிலையம், பாடசாலை புகையிரத நிலையம், ஆஸ்பத்திரிக்கு அண்மையில் 2½ பரப்பு காணி புதிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. மின்சார, தண்ணீர் வசதியுண்டு. ''பரம்ஸ்'' நியூமார்க்கட், சாவகச்சேரி, அல்லது ப.கனகரட்ணம், சிவன்கோவிலடி, சாவகச்சேரி. 8162

யாழ்நகர் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நேரில்வரவும். அ.குமாரசாமி, 39/10, மின்சார நிலையவீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
8170

பளையில் தென்னம் தோட்டம்விற்பனைக்குண்டு. உபஉணவுப் பயிர்ச் செய்கைக்கும் உகந்த இடம் கிணறுகளும் உண்டு.முருகையா, அடம்பன்.
8193

## விற்பனைக்கு

கண்டிவீதி-புங்கன்குளம் சந்தியில் சகல வசதிகளுடன், வீடும் 1½ பரப்புக் காணியும், வெறுமையான நிலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு- மல்ரி சேவிசஸ், த டன்லப் ஸ்ரோர்ஸ், 234 (446) ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 23541.
8214

## தேவை

வருமானவரி, தொழிற்சட்டம் சிங்களம் ஆகியவற்றில் தேர்ச்சியுள்ள 36 வயதுள்ள ஓய்வு பெற்ற அரசாங்க கணக்காளர் உடனடியாக வேலை தேடுகின்றார். கடிதமூலம் விண்ணப்பிக்கவும் விளம்பர இல; 8173 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 8173

அலுமினியம் தொழிற்சாலைக்குகுறைந்தது 3வருட அனுபவமுள்ள ஸ்பின்னர் உடனடியாகத் தேவை. தகுதிக்கேற்ப நல்ல சம்பளம் வழங்கப்படும். தொடர்புகொள்ளவும். 'றஞ்சனுஸ்' இல 17, 18 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
8206

## தேவை

கொப்பரு கொள்முதல் செய்கிறேம். தரத்திற்கேற்ப விலை நிர்ணயிக்கப்படும். விபரங்களுக்கு நேரடியாக தொடர்பு கொள்ளவும். மல்ரி ஓயில் இன்டஸ்றீஸ் லிமிட்டட் (ஆஸ்பத்திரி முன்பாக) K. K. S. வீதி, இணுவில் தொலைபேசி: 339 - (CKM)
8188

## FOR SALE

Pure bred cocker spaniel pups, Alsatians and Love birds for sale. 22, Somasundaram Avenue, Chundikuli.
8196

## WANTED

Leading Mercantile Firm in Jaffna requires for immediate employment. A middle aged Book Keeper/Clerk capable of drafting Final Accounts. only those with at least five years experience. apply in own handwriting Stating Salary expected to 484, Hospital Road. Jaffna.
8180

An energetic Field Canvassar for booking orders for popular brands of Office Equipments, Electric Tools, Agricultural Implements etc. Those possessing Motor Cycle preferred. Security and previous experience essential. Apply to 484. Hospital Road, Jaffna. 8181

## புங்குடுதீவு-நயினுதீவு பல. நோ. கூ. சங்கம் விற்பனை

எம்மிடம்கீழ்த்தரப்பட்டுள்ள பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைசெய்ய இருக்கின்றது. விண்ணப்பப்பத்திரத்திற்கு ரூபா 5/-ம் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி கேள்விப் பத்திரங்களைப்பெற்று 30-8-83ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபால்மூலம் பொது முகாமையாளர், புங்குடுதீவு-நயினுதீவு பல. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு என விலாசமிடப்பட்டு அனுப்புதல்வேண்டும்.

என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் ''கேள்விப்பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.

**பொருட்களின் விபரம்:**

1. பாவித்த வெற்று பரல்கள்.
2. சுவீப்பிங் மா.
3. சுவீப்பிங் சீனி.
4. பாவிக்கப்பட்ட மரங்கள்.
5. பாவிக்கப்பட்ட லொறி ரயர்.
6. பாவிக்கப்பட்ட லொறி ரியூப்.
7. பாவிக்கப்பட்ட லொறி உதிரிப்பாகங்கள்.
8. பீடிப் பெட்டிகள்.

**பொதுமுகாமையாளர்**
புங். நயி. பல.நோ. கூ. சங்கம்
(8213) புங்குடுதீவு.

## சுகாதாரஊழியர்களின் லீவு ரத்து

[பண்டத்தரிப்பு]

மறு அறிவித்தல்வரை சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் சகல தரத்து ஊழியர்களினதும் லீவுகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் எஸ். டி. எம். பெர்ணுண்டோ சகல சுகாதார நிறுவனத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள பொதுச் சுற்றறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அரசாங்க வைத்திய உத்தியோகத்தர் வழங்கும் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களையே சுகவீன லீவுக்காக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்றும், அரசாங்க ஊழியர்களுக்கு வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குவதில் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறும் இந்தச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் தமது பிரிவிலுள்ள சகல சுகாதார நிறுவனங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற்படி லீவு ரத்துப்பற்றிய சுற்றறிக்கையைச் சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துமாறு கேட்டுள்ளார்.

## தேவை

FITTER / CHARGE HAND

நுட்பமான வேலைகளை விளங்கும் ஆற்றலும், இயந்திரங்களை உருவாக்குவதில் அனுபவமும் உள்ள பொருத்துனர்கள் பூரண விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

**டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்**
காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை.

## நன்றி நவிலல்

16-6-83 வியாழக்கிழமை காலமாகிய இளைப்பாறிய போஸ்ட்மாஸ்டர் உயர்திரு. நாகமுத்து செல்லையா அவர்களின் ஈமக்கிரியையில் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியத்தில் பங்குபற்றியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

திருமதி செல்லையா, பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளை.

'லச்சுமி கிரி',
மானிப்பாய். 8210

## கேள்விப் பத்திரம்
### வெற்றுச்சாக்கு விற்பனை

தெல்லிப்பளை ப. நோ. கூ, சங்கத்தில் 4000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. ரூ. 250/- வைப்புப் பணமாக தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரம் 19-08-83ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4-00மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பளை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்கத்தில் ''வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திரம்:' எனக் குறிப்பிடப்படல் வேணடும். கேள்விப்பத்திரம் 19-08-83ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிக்கு சங்க உபசபையினர் முன்னிலையில் திறக்கப் படும்.

**பொதுமுகாமையாளர்**
தெல்லிப்பளை
ப. நோ கூ. சங்கம்,
தெல்லிப்பளை. 8203


## யாழ். சைனீஸ் றெஸ்ரோறன்ற்

YARL CHINESE RESTURANT

இன்று தொடக்கம் மேற்படி ஸ்தாபனம் வழமைபோல் செயற்படும்.

தினசரி காலை 10-30 மணி தொடக்கம் மாலை 7-30 மணி வரை திறந்திருக்கும்.

மதியபோசனப் பார்சலும் விநியோகிக்கப்படும்.

**யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற்**
124, R. R. நல்லையா றேட், யாழ்ப்பாணம்.
(8208)



The Newest First Class in a Fine Location
IN JAFFNA CITY 32 ROOMED HOTEL
SCHEDULED TO OPEN IN AUGUST 1983.

Wanted immediately for the following posts

A. Receptionist (Female)
B. Resturant Stewards
C. Room Boys
D. Cooks (Able to Prepare Eastern and Western Food)

Experience : Minimum of Two Years.
Benefits : Free Food and Accomodation.
Salary : Negotiable.

Call Personally with Bio-Data and Certificate on Saturday 20th. August 1983 at 9-00 A.M.

THE MANAGER,

**Hotel Gnanams**
299, Clock Tower Road,
JAFFNA. 8209


## மரண அறிவித்தல்
### திருமதி கந்தமுத்து கற்பகம்

திருமதி கந்தமுத்து கற்பகம் சித்தன்கேணி சிங்கப்பூரில் 13-8-83இல் காலமானுர். இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் கந்தமுத்துவின் அன்பு மனைவியும், கதிரேசு சட்டம்பியார் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்ற தடாதகை பிராட்டி, மங்கையர்க்கரசி, பண்டிதர் திருஞானசம்பந்தர், நமசிவாயம்,வைரமுத்து நல்லப்பு ஆகியோரின் சகோதரியும் தெய்வானைப்பிள்ளையின் அன்புத் தாயாரும் வைரவநாதர் கந்தசாமி [Block 797, Flat 6, S. A. F. Seletar Singapore 2879] இன் அன்பு மாமியும், சிதம்பரநாதனின் அன்புப் பேத்தியுமாவார். இவ்வறிவித்தலை உற்ரூர் உறவினர் நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளவும்.

V. A. பொன்னம்பலம்.
8215 சித்தன்கேணி.


WE PROUDLY ANNOUNCE OUR APPOINTMENT AS DISTRIBUTORS FOR THE NORTHERN PROVINCE FOR THE UNDERMENTIONED PRODUCTS IMPORTED BY MESSRS. METROPOLITAN AGENCIES LTD. COLOMBO.

Please contact us for your requirements of any type of Office Equipments or Consumables

'Canon' — Photocopiers and Calculators
'Citizen' — Cash registers
'Optima' & Silver Reed — English Typewriters
'Halda' — Tamil Typewriters
'Ryobi' & 'Superfax' — Duplicating Machines
'Oce' 214 — Plan Printing Machines
'Fuji-Kiden' — Overhead Projectors
'Metse' — Steel Cabinets and Cupboards

All Machines carry One Year Guarantee.
Attractive discounts will be allowed to Traders.

**CEYLON MERCHANTS LTD.**
484, HOSPITAL ROAD, JAFFNA. — Phone : 22134



வெளிநாட்டில் பயிற்சிபெற்ற கைதேர்ந்த 'வீடியோ' கமரா வல்லுநர்களால் உங்கள்மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ள முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளுங்கள்.

**வீனஸ்** 266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.

**நியூவீனஸ்** 79/1, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

# இன்றைய பலன்

ஆடி 30ம் திகதி
திங்கட்கிழமை
(15—8—83)

மேடம்: பயணத்தில் வளமான திருப்பம் ஏற்படும் அதிர்ஷ்ட தேவதையின் பார்வை கிடைக்கும், நல்ல காரியம் ஆரம்பிப்பதற்குப் பொன்னனதினம்.

இடபம்: ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறு ஒன்ருக அமையும். வந்து சேரவேண்டிய பணத்தில் மீண்டும் தடை ஏற்படலாம்.

மிதுனம்: பூமியால் லாபமுண்டு. புத்திரர் புகழ் சேரும். பொதுசனத் தலைமைக்கான வாய்ப்புக்கிட்டும். உடல் நலத்தில் நல்ல முன்னேற்றமுண்டு

கடகம்: நல்லதைச் செய்வீர்கள் பிரமுகர் உங்களைத் தேடிவருவார்கள். சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில் துறையில் வெற்றியுண்டு

சிங்கம்: நீண்டநாள் எதிர்பார்த்த நிதி வசதி இன்று கிடைக்கும். சுற்ருடலில் மதிப்பு உயரும். பெண் ஒருவரிஞல் சந்தோஷமான செய்தி பரவும்.

கன்னி: ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழியில் இறங்கவேண்டாம். சிறிய விடயத்துக்குக் கூட பெரிய கோபம் தோன்றலாம்.

துலாம்: பணத்தைக் கொடுத்து பகையைச் சம்பாதித்துக்கொள்வீர்கள். தொழில் துறையில் சோர்வு தென்படும். நண்பர்கள்மூலம் தொல்லை உருவாகும்.

விருச்சிகம்: ஆராய்ச்சியாளர்களுக்கு பொன்னன தினம், அறிவுத்தாகம் மேலிடும். புதிய கண்டுபிடிப்பினுல்அதிகநன்மை உண்டு.

தனு: துஷ்டர்கள் உங்களை மாட்டிவைப்பார்கள். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களைத் தவிர்க்கவும்.

மகரம்: புதிய வாகனம் கொள்முதல்செய்வதனுல் லாபம் உண்டு. பணம் பல வழிகளாலும் கிடைக்கப்படலாம். சொகுசான வாழ்வுண்டு.

கும்பம்: கட்டிவெல்லம் போல் இனிக்கும் வாழ்வுண்டு. பெரிய இடத்துச் சினேகிதம் செல்வாக்கைத் தேடித்தரும்.

மீனம்: தென்றலும் தீயாக மாறும். குடும்பத்தில் அபிப்பிராயம் தோன்றி மறையும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00
சித்தி

ராணி (யாழ். நகர்)
10-30, 2-30
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்

சாந்தி யாழ். நகர்
காலை 10-30, 2-30
சிவாஜி — லட்சுமி
தியாகம்
(ஈஸ்ட்மென் கலர்)

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
ரஜனிகாந்த்-ஸ்ரீவித்யா
பொல்லாதவன்

ராஜா (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்

றீகல்
10-30, 2-00, 4-30
GIRL FROM INDIA

லிடோ (யாழ். நகர்)
காலை 10-30
ரஜனிகாந்த்
முரட்டுக் காளை

வெலிங்டன்
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
மூடுபனி

ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
விஜயகுமார், ஜெய்கணேஷ், லதா, நாகேஷ், சுபாஷினி
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(புத்தம் புதிய வண்ணப் பிரதி)

## ஸ்ரீமகாகணபதி ஆலய உற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் மேற்கு ஸ்ரீ மகாகணபதி பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் நேற்றுப் பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது திருவிழா பத்து நாட்கள் நடைபெறும்.

நாட்டு நிலவரத்தைக் கருத்திற்கொண்டு உற்சவகால திருவிழாக்கள் யாவும் கோவில் உள்வீதியிலேயே நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதவியவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நன்றி

(மட்டக்களப்பு)

யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து மட்டக்களப்புக்குச் சென்ற மாணவர்கள், தங்கள் பிரயாணத்துக்கு உதவிய அதிகாரிகளுக்கும், சக மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் விடுத்துள்ள அறிக்கையில் நன்றி தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த சுமார் 250 மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து 3 பஸ்களில் பாதுகாப்பாகக் கொண்டுசெல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு.அந்தோனிமுத்து, யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பதிவாளர் எஸ். எஸ். தர்மபாலன், பல்கலைக்கழக சக மாணவர்கள், திருநெல்வேலி மக்கள் ஆகியோருக்கும் அவர்கள் நன்றிதெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு செல்லும் போது கிளிநொச்சியில் நடைபெற்ற பஸ் விபத்தின்போது காயமுற்ற மாணவர்களுக்கு அவசர சிகிச்சைஅளித்த கிளிநொச்சி வைத்திய அதிகாரி, பொலிசார் ஆகியோருக்கும் மாணவர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (மா)

# காதலுக்குத் தடை: யுவதி தற்கொலை

[கிளிநொச்சி]

கல்லூரி மாணவன் ஒருவரைக் காதலித்துவந்த 19 வயது யுவதி ஒருவர் தனது காதலுக்குத் தடை ஏற்பட்டதால் கிருமிநாசினியை அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

கிளிநொச்சி திவ்வியபுரத்தில் வசித்துவந்த மயில்வாகனம் சரோஜாதேவி என்பவரே மரணமானவராவார். இம்மரணம் சம்பந்தமான விசாரணையைக் கிளிநொச்சிப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளைக் கிளிநொச்சிப் பொலிஸ் கான்ஸ்டபிள் எம். கணேசதுரை ஆஜர் செய்தார். பிரேதபரிசோதனையை பதில் சட்ட வைத்திய அதிகாரி திருமதி என். கந்தசாமி நடத்திஞர்.

மரணமான சரோஜாதேவியின் பேரன் சு. கதிரவேலு சாட்சியமளிக்கையில் கூறியதாவது;-

''மரணமானவருக்குத் தாய் தந்தையர் கிடையாது இதஞல் எனது பாதுகாப்பிலே வளர்ந்து வந்தார். அண்மைக்காலமாக சரோஜாதேவி கல்லூரி மாணவன் ஒருவரை அவர் காதலித்து வந்ததாக அறிந்தேன். ஆனுல் நான் நம்பவில்லை. சம்பவதினம் கமத்தில் இருந்து வீடு வந்தபோது மரணமான பேத்தியும் பிரஸ்தாப மாணவனும் அறையுள் சல்லாபித்துக் கொண்டிருந்தார்கள். உடனே ஆத்திரம் தாங்காது இருவரையும் அடித்தேன். மாணவன் சென்றபின் சரோஜாதேவி ஒருவருக்கும் தெரியாமல் வயலுக்குச்சென்று கிருமிநாசினியை அருந்திமரணமாஞர்.''

தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (அ)

## கிளிநொச்சியில் பூரண அமைதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நிலவிய பதட்டநிலை தணிந்து இப்போது அமைதி நிலவுகிறது. அலுவலகங்கள், வியாபார நிலையங்கள் வழமைபோல் இயங்குகின்றன. ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டபின் காலைக்காட்சிகளை மட்டும் நடத்திய திரைப்பட மாளிகைகள் தற்போது இரவுக் காசிகளையும் காட்டத் தொடங்கியுள்ளன.

கொழும்பு, மலையகம் மற்றும் பகுதிகளில் இருந்து வந்துள்ள அகதிகள் கிளிநொச்சியில் உள்ள உறவினர் நண்பர்கள் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர், (அ)

த. சண்முகராஜா
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்
கோண்டாவில்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

சிறுப்பிட்டி தெற்குகாலஞ் சென்றுபோன முத்து நவஜீவன் என்பவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

-மரணமெய்தியவர் மரணச்சொத்து)
நியாயாதிக்கம் ) இல. 3735

நவஜீவன் கைம்பெண் கருணாவதி, உரும்பராய் தெற்கு, உரும்பராய்.
-மனுதார்

மேற் சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மரண சாதனமற்ற மரணச்சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேற்சொல்லப்பட்ட மனுதாரால் இந் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதில், அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1983ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு முன்னர் இந்நீதிமன்றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு ஏதும் எதிர்க்காரணம் இருப்பின் தெரிவிக்குமாறுஇத்தால் தேவைப்படுத்தப்படுகிருர்கள்.

1983ம் ஆண்டு ஜுலை மாதம் 2ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
ஒப்பம்
தா. குலஞானம்,
பதிவாளர்.

தயாரித்தது:
த. சண்முகராஜா,
மனுதாரின் சட்டத்தரணி.
3101

ஹோம் பிறின்ஸ் லிமிட்.

யாழ். புடவை வியாபாரிகளுக்கு
ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறின்ஸ் லிமிட், 82, கன்ஞதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறின்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடைஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்குண்டு.

I. ✯ சாயமூட்டிய பொப்பிளின்
II. ✯ வெள்ளை பொப்பிளின்
III. ✯ பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
ஹோம் பிறின்ஸ் லிமிட்.
82, கன்ஞதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(போன்: 24310)

தலைமைக் காரியாலயம்:
ஹோம் பிறின்ஸ் லிமிட்.
463, காலி வீதி, கொழும்பு-3.



வெளிநாடு செல்கிறீர்களா?
உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்கட்கு:-
த பிறின்ஸ் கம்பனி லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680

வீடு உங்களுக்கு.... சிரமங்கள் எங்களுக்கு!
எங்கள் பொறியியலாளர்களுடன் சேர்ந்து உங்கள் வீடுகளைத் திட்டமிடுங்கள்
அவர்களுடன் சேர்ந்தே உங்கள் வீடுகளைத் திறம்பட நிர்மாணியுங்கள்.

★ திட்டமிடல் ★ படம் வரைதல் ★ கணக்கிடல்
★ நிர்மாணித்தல் ★ புனரமைத்தல்
★ நவீனவசதிகளுடன் கூடிய சிக்கன வீடுகள் (low cost housing) அமைத்தல்.

செலவையும் சிரமத்தையும் குறைத்து, தரத்தினை உயர்த்த எம்மைக் கலந்தாலோசியுங்கள். அல்லது உங்கள் விலாசத்தை அறிவித்தால் எமது பொறியியலாளர் உங்களுடன் நேரில் தொடர்பு கொள்வார்.

டைனமிக்
என்ஜினியரிங் லிமிற்றெட்
கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை.

## மணிவாக்கு

மேலை நாட்டுப் பண்பாட்டினால் நம் குருட்டு நம்பிக்கைகளுக்கு ஆட்டங் கொடுத்திருக்கிறது. ஆனால் அவநம்பிக்கையும் குருட்டுத்தனமாயிருக்கக்கூடும்.
—விநோபாபாவே

# நமது நோக்கு

## ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமா?

இன்று பாரததேசத்தின் சுதந்திரதினம். தேசபிதா மகாத்மாகாந்தியின் தலைமையில் சுதந்திரத்துக்குப் போராடிய வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தினம்.

சுதந்திரம்பெற்ற தினத்தன்று (ஆகஸ்ட் 15, 1947) பாரதம் பூராகவும் பாடப்பட்ட பாட்டு 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்தசுதந்திரம்அடைந்துவிட்டோமென்று—ஆடுவோமே' என்ற பாட்டு.

இதுபாட்டுக்கொரு புலவன் பாரதியின் பாட்டு. பண்டைக்காலத்தில் . பல் துறைகளிலும் புகுந்து தமிழ் மக்களின் வாழ்க்கையை இன்புறுத்திய இசைத் தமிழ் பின்பு நாட்டுப்பற்றை வளர்ப்பதற்கும், அரசியல் அறிவைப் பரப்புவதற்கும் பயன்பட்டு வந்தது பாரதியாரின் பரந்த தேசிய உணர்வு இதற்கு வழிகாட்டியது.

இந்திய சுதந்திர போராட்டக் கதை ஒரு மாபெரும் இதிகாசம். பண்டைய ராமாயணத்தின், பாரதத்தின் சிறந்த அம்சங்கள் அங்கு பளிச்செனத் தோற்றமளிக்கின்றன.

டில்லியின் செங்கோட்டையில் சுதந்திர தினக் கொண்டாட்டம் மிக விமரிசையாக நடைபெற்ற அச்சமயத்தில் மகாத்மாகாந்தி எங்கே இருந்தாரென்பது எங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்?

இந்து-முஸ்லிம் கலவரம் உச்சக்கட்டத்திலிருந்த கல்கத்தாநகரில் கொலைகாரர் மத்தியில் குடியிருந்தார். பல்லாயிரக் கணக்கான வாழ்த்துச் செய்திகளும் பாராட்டுகளும் கொண்டாட்டத்தின் குதூகலமும் அவரை அசைக்கவில்லை; அந்த இன்பத்தில் அவர் எடுபடவில்லை.

சுதந்திர இந்தியாவின் மகாதேசாதிபதி மவுண்பாட்டன் பிரபு டில்லியிலிருந்து காந்திக்கு அனுப்பிய பாராட்டில், ''பஞ்சாப்பில் 55,000 ராணுவ வீரர்கள் கடமையிலிருந்தும் அங்கு கலவரம் அதிகரித்திருக்கிறது: வங்காளத்தில் தாம் தனித்து நின்று அமைதியை நிலைநாட்டிய அற்புதம் நான் என்றும் அறிந்ததில்லை'' என்று குறிப்பிட்டிருந்தார்.

இதன் இரகசியம் என்ன? ஆன்ம வீரம், படைவீரத்தினும் பெரிதென்னும் உண்மைதான் அது. இது பாரத நாட்டின் அழிவற்ற சொத்து; பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே தமிழ் மக்கள் அறிந்துகொண்ட உண்மை.

புயவலியும் படைவலியும் படைத்த வீரர் நாட்டுக்குத் தேவை; யுத்த காலத்தில் நாட்டைப் பாதுகாப்பது அவர்களின் கடமை; ஆனால் பகைமையை ஒழிக்க படைவலி உதவாது.

''இந்திய நாடு இரண்டாகப் பிரிந்தபோதும், இவ்விரு இனங்களுக்கேபகைமை வளர்ந்துவருமாயின் இன்றைய சுதந்திரம் எதற்குதவும்'' என்றார் காந்தி. இன ஒற்றுமைக்கு தம்உயிரையே அர்ப்பணித்தார். அத்தீரச் செயலேஇன்றும் இந்தியாவைப் பாதுகாக்கின்றது.

அகில உலகவரலாற்றில் முன்னேபின்னே இடம் பெறாத தியாகச் செம்மலின் ஆன்ம வீரத்தால் இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்திரம் வழிந்தோடி இலங்கைக்கும் மற்றைய ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கும் பொசிந்தது.

1948ல் எங்கள் நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரம் பூரணப்படுவதற்கு இன்னும் எவ்வளவு காலம் எடுக்குமென்பது திடம்படச் சொல்லமுடியாத நிலையில் உள்ளது; நிச்சயம் ஆனந்தமற்ற நிலை நீடிக்கிறது,

எங்கள் தாய்நாட்டின் சுதந்திரம் 36 வருடங்களில் எத்தனை மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கண்டிருக்கிறது; நினைக்க முடியாத அற்புதங்கள் என்று நாம் சொல்லவில்லை ஆனால் தேசபிதாவின் தியாகம் வாழையடி வாழையென நிலைபெற்றிருக்கிறது.

இந்தியாவின்'மாணிக்கம்' என்று மகாத்மா சூட்டிய பட்டம் பிரதமர் நேருவைக் குறிக்கின்றது; அவருக்குப் பின் அந்த தியாக பரம்பரையில் பிரதமர் இந்திரா நாட்டைக் குலுக்கும் பல சவால்களை ஆன்ம வீரத்துடன் எதிர்நோக்குவது தேசபிதாவின் பரம்பரைப் பயிற்சியே!

எங்கள் நாட்டுக்கு இந்த நெருக்கடியில் இந்தியா உதவி வழங்கமுடியுமென்று நாம் ஏற்கனவே சொல்லியிருந்தோம்; இதற்கு எதிர்மாறாக இங்குள்ள தினசரிகள் கேலிசெய்தன, கூக்குரல் எழுப்பின. இன்று அசைவற்றுப் படுத்துவிட்டன.

பகைமையை ஒழித்து, தமிழ் மக்களின் உரிமை வாழ்வை உறுதிப்படுத்த இந்தியப் பிரதமர் இலங்கை அரசுக்கு உதவுவாரென நம்பலாம்.

## பனாமா கப்பல் தீ அணைக்கப்பட்டது

(திருகோணமலை)

திருகோணமலைத் துறைமுகத்தில் தரித்து நின்றவேளையில் பனாமா சரக்குக் கப்பல் 'அல்மாஸ்' தீப்பற்றியபோது பலமணித்தியாலம் முயற்சி செய்து இத் தீ அணைக்கப்பட்டது. இலங்கைதுறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான மகாசேனன் என்றதீயணைக்கும் கப்பலே இத்தீயை அணைத்தது.

துறைமுகத்தில் தங்கிநின்ற ஏனைய கப்பல்களின் பாதுகாப்புக்கருதி இக்கப்பல் துறைமுகப்பகுதிக்கு வெளியே இருபத்தைந்து மைல்கள் இழுத்துச் செல்லப்பட்டு, 'வவுல் பொய்ன்ட்' என்ற இடத்தில் தரித்து வைத்துள்ளனர். லொயிட்ஸ் காப்புறுதி ஸ்தாபனத்து கப்பல் அளவையாளர் திருமலை வந்து கப்பலுக்கு ஏற்பட்ட பாதிப்பினை மதிப்பீடு செய்யவுள்ளார்.

கப்பலின் என்ஜின் அறை, 4ம் இலக்க பொதியறை ஆகியன முற்றாக எரிந்துள்ளன. சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் 27ம் திகதி தொடக்கம் இக்கப்பல் திருமலைதுறைமுகத்தில் தங்கிநின்கின்றது. இக்கப்பலில் சில திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.

## மக்கள் கருத்து

பலாலிவீதி அன்னசத்திர ஒழுங்கை முகப்பில் மலம் நிரப்பிய மூன்று வாளிகள் மூடாத நிலையில் வைக்கப்பட்டிருந்ததையும், நல்லை உற்சவ கொடியேற்றத் தினமான அன்று அடியார்களும் மற்றும் பொதுமக்களும் மூக்கைக் கையால் பிடித்தபடி அருவருப்புடன் அவற்றைக்கடந்து சென்று கொண்டிருந்ததையும் கண்டேன்.

பின்னர் மாலையிலும் நான் அவ்வழியே சென்றபொழுது அவ்வாளிகள் மலம் நிரம்பிய நிலையில், காகங்கள் நீச்சலடித்துக் கொண்டிருந்ததைக் கண்டு இந்த வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பற்றியும் அவர்களை நிர்வகிப்பவர்களையும் மனதிலே கடிந்து கொண்டேன்.

யாழ்.நகரமக்களுக்கு எத்தனைவித தொல்லைகள்?

எஸ். எஸ். ரத்தினம்
வைமன்வீதி,
யாழ்ப்பாணம்.

### கிழக்கு ராமநாதபுரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை திரு. நெடுமாறனின் பாதயாத்திரை ஏழாவது நாளாக நேற்றுவரை நடைபெற்று தொடர்ந்தும் சென்றுகொண்டிருக்கிறது. நாளை இப்பாதயாத்திரைக் குழுவினர் பாம்பன்பாலத்தைக் கடக்க ரயிலேறுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இன்று 15-ம் திகதி இப்பாதயாத்திரைக் குழுவினர் இராமேஸ்வரம் போய்ச்சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [கி]

### நல்லூர் உற்சவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரர்களும், எமது வேண்டுகோளை அனுசரித்து உதவியும், ஒத்துழைப்பும் வழங்குமாறும் ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் கேட்டுக்கொண்டிருக்கிறார். (மா)

### பிரதமர் இந்திரா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லிங்கத்தை அவசரமாக புதுடில்லி வரும்படி தகவல் கொடுத்திருந்தார்.

இந்த அழைப்பை ஏற்றே திரு. அமிர்தலிங்கம் நேற்று அதிகாலை புதுடில்லி வந்து சேர்ந்தார்.

திரு. எம். ஜி. ஆரின் சந்திப்பை முடித்த பின்னர் திரு. அமிர்தலிங்கம் அரச விருந்தினர் இல்லத்தில் தங்கினார். அங்கு அவரை தமிழக அரசியல் பிரமுகர்களான அமைச்சர் வீரப்பன், சபாநாயகர் ராஜாராம், அமைச்சர் பொன்னையன், திரு. குமரி அனந்தன், திரு. அன்பழகன், திரு. முரசொலி மாறன் ஆகியோர் சந்தித்து உரையாடினர்.

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தர்மபுரம் சென்றிருந்ததால் அவரால் அங்கு வரமுடியாதிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

திரு. அமிர்தலிங்கம் திருமதி காந்தியுடன் பேச்சுக்களை முடித்த பின்னர் மீண்டும் தமிழகம் வந்து சகல தமிழக அரசியல்வாதிகளுடனும் இலங்கைத் தமிழர் பிரச்னைபற்றி பேசுவாரென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

### பாதிக்கப்பட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

இம் மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் கடமையாற்றி. யாழ், மாவட்டத்திற்கு அகதிகளாக வந்துள்ள ஆசிரியர்களுக்கு மட்டும், அவர்கள் விரும்பும் பாடசாலைகளில் கடமையாற்ற அனுமதி வழங்கப்படுமென்றும் திரு. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

## கிளர்ச்சியாளரிடம் சாட் கேந்திர நகர் வீழ்ச்சி!

போர்ட்லமி, ஆக. 15

மத்திய ஆபிரிக்க நாடான சாட்டில் முக்கிய கேந்திர நகரமொன்று கிளர்ச்சிப்படைகளிடம் வீழ்ச்சியடைந்துள்ளது.

லிபியா விமானப்படையின் துணையுடனேயே கிளர்ச்சிப் படைகள் இக்கேந்திர நகரைத் தம்வசப்படுத்தின. இக்கேந்திர நகரம் என்ஜமியா என்ற நகரத்துக்கு அருகில் 125மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு கிளர்ச்சிப்படையினரின் இரு ஹெலிகப்டர்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி, சாட் கிளர்ச்சியாளர்களுக்கு லிபியா உதவி வழங்குகின்றதுஎன்று பிரெஞ்சு அரசாங்கம் குற்றஞ்சாட்டியதை மறுத்துள்ளார். அமெரிக்க தொலைக்காட்சிச் சேவையொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு மறுத்தார்.

கேணல் கடாபி இவ்வாறு மறுத்துள்ளபோதிலும் மேற்கத்திய நாடுகள் பல லிபியாவே சாட் கிளர்ச்சியாளர்களுக்கு கூடுதல் ஆதரவளிக்கின்றது எனக் குற்றஞ்சுமத்தியுள்ளது. (கி)

### வவனியா வந்து...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் தனியார் வாகனங்களிலும், இ. போ. ச. பஸ்வண்டிகளிலும் வந்தனர்.

இப்படி இ. போ. ச. பஸ்களில் வந்த அநேகர் வவனியாவில் இறக்கப்பட்டுக் குறித்த அனைவரும் வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் அமைக்கப்பட்ட அகதிகள் முகாமுக்குப் பொறுப்பதிகாரியாக்க் கடமை புரிந்த உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குணநாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வவனியாவிலிருந்து வட பிராந்திய இ. போ. ச. பஸ்களில் இந்த அகதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாக முகாம் நிர்வாகி தெரிவித்தர்ா.

இங்குவரும் அகதிகளுக்கு உணவு மற்றும் வசதிகளும் சிறந்தமுறையில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஏற்பாடுகளுக்கு வவனியாப் பகுதி இளைஞர்களே முன்நின்று உழைத்ததுகுறிப்பிடத்தக்கது.

பவுசர்களில் குடிநீர் விநியோகிப்பதற்கு நகர சபைத் தலைவர் திரு. ஐ. கேதீஸ்வரன் ஏற்பாடு செய்திருந்தார்.

முதலுதவி சிகிச்சை நிலையம் ஒன்றும் அங்கு நிறுவப்பட்டது. வவனியா லயன்ஸ் கிளப் உட்படப் பல தொண்டர் நிறுவனங்கள், அனைத்துக்கும் உதவினார்கள் என தெரிவிக்கம்பட்டது. (அ)

## நல்லூர்
## கொடியேற்ற உற்சவத்தில் தாலிக்கொடி திருட்டு

(வண்ணார்பண்ணை)

நல்லூர் கந்தசுவாமிகோவில் வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை காலை பத்து மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது. மிகவும் அமைதியாகவும் கட்டுப்பாட்டுடனும் இவ்வுற்சவம் நடைபெற்றபோதும், கோவிலில் இம்முறையும் ஒரு தாலிக்கொடியும், சங்கிலியும் களவாடப்பட்டன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பக்தர்கள் மத்தியில் பெரும் திகிலும், அதிர்ச்சியும் ஏற்பட்டிருந்தது.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை வழமைபோல் இம்முறையும் தொண்டர் சேவையில் ஈடுபட்டிருந்தது. கோவில் உள் வீதியில் தொண்டர்கள் கண்காணிப்புடன் ஒழுங்கை நிலைநாட்டி வந்த போதும் ஆலயத்தின் அர்ச்சனை ரிக்கட் பெறும் இடத்தில் பெண்கள் கூட்டம் மிகநெரிசலாக இருந்த சமயம் மேற்படி இரண்டு திருட்டுக்களும் நடந்துள்ளன.

வழமைபோல் ஏனைய தொண்டர் சேவைகளும் கோவிலுக்கு வெளியில் இடம் பெற்றன.

## அமெரிக்காவின் ஆத்திரமூட்டும் நடவடிக்கை: சோவியத் கண்டனம்

மாஸ்கோ ஆக, 14

மத்திய அமெரிக்கக் கடற்பிராந்தியத்தில் சோவியத்யூனியனின் வாணிபக் கப்பல் ஒன்றை அமெரிக்கக் கடற்படையினர் இடைமறித்து இடைஞ்சல் விளைவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு இதுபற்றி சோவியத்யூனியன் புகார்செய்துள்ளது. அப்புகாரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

'-சோவியத்தின் வாணிபக் கப்பலொன்று தத்திய அமெரிக்கக் கடல்பகுதியில் சென்றுகொண்டிருந்தவேளை இரு அமெரிக்கக் கடற்படைப் போர்க்கப்பல் அதனை மறித்துள்ளன. பின்னர் அவ்வாணிபக் கப்பல் நீர்வழிப்போக்குவரத்துச் சட்டவிதிகளை மீறுவதாகப் போர்க் கப்பலில் இருந்த அமெரிக்கர்கள் எச்சரித்துள்ளனர். இத்துடன் அந்த சோவியத் கப்பலில் படம்பிடிக்கும் வகையில் அதற்கு மேலாகக் ஹெலிக்கொப்டர் ஒன்றும் வட்டமிட்டபடி இருந்தது, இத்தகைய நடவடிக்கைகள் சோவியத் யூனியனை ஆத்திரமூட்டுவதாக இருக்கின்றது.

சோவியத்தின் புகார் மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அமெரிக்கா இதுவரை இதுபற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. (கி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம்15-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.